இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 222 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 10 – செவ்வாய்க்கிழமை 24 மார்ச் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 222 : Thiruvalluvar Year - 2057 - Panguni 10 - Tuesday 24 March 2026 - Chennai 12 Pages ₹ 5.00



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (23.3.2026) காலை சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.




கழகத் தலைவரும், – தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (23.3.2026) மாலை சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் புதுக்கோட்டை, கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

## இலட்சக்கணக்கானோரின் உயர்கல்விக்கு ஊன்றுகோல் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம்!

# எளிய குடும்பங்களின் அடுத்த தலைமுறைகள் செழிக்க தி.மு.கழக கூட்டணிக்கு வாக்களிப்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, மார்ச் 24 -**

**“இலட்சக்கணக்கானோரின் உயர்கல்விக்கு ஊன்றுகோலாக அமைந்துள்ளது ‘திராவிட மாடல்’ அரசின் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம் என்றும், ஏழை - எளியக் குடும்பங்களின் அடுத்த தலைமுறைகள் செழிக்க தி.மு.கழகக் கூட்டணிக்கு வாக்களிப்பீர்” என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

“அரசுப் பள்ளிகளில் பயின்ற, ஏழை, எளிய மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடவும், அரசுப் பள்ளி மாணவரின் உயர்கல்விச் சேர்க்கையை உயர்த்திடவும் ‘தமிழ்ப் புதல்வன்’ எனும் ஒரு மாபெரும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவர்கள் பாடப் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி அவர்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.

இத்தகைய முன்னோடித் திட்டங்களின் மூலம் நமது இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி அவர்கள் நமது மாநிலம் மற்றும் நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழ்வார்கள். இத்திட்டத்தின் வாயிலாக, அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் படித்து 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்று கல்லூரிகளில் சேரும் ஏறத்தாழ 3 லட்சத்து 28 ஆயிரம் கல்லூரி மாணவர்கள் மாதந்தோறும் ரூ.1,000 பெற்றுப் பயன் அடைந்து வருகிறார்கள்.

இந்தத் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு 360 கோடி ரூபாயை இந்த ஆண்டிற்கு



அனுமதித்துள்ளது. பொருளாதார வசதிக் குறைவு உட்பட பல்வேறு காரணங்களால் பள்ளிப் படிப்புக்குப் பின் உயர் கல்வியைத் தொடர முடியாத நிலையில் இருந்த மாணவர்களுக்கு உயர்கல்வியில் சேர உதவுகிறது. மாணவர்கள் கல்லூரிகளில் அதிக அளவில் சேர்க்கை பெறும் நிலை எழும். மாணவர்கள் உயர்கல்வித் தேவைகளை அவர்களே பூர்த்தி செய்து கொள்ளவும் தமிழ்நாட்டின் மொத்த மாணவர், மாணவியர் சேர்க்கை விகிதம் (GER) உயர்வதற்கு வழிவகை செய்கிறது.

இத்தகைய ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டத்தால் பலனடைந்து வரும் மாற்றுத்திறனாளி மாணவன் கோவை சிறுவாணியைச் சேர்ந்த ஜெயராம் என்பவரின் வீடியோ பதிவை குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைப்பதிவில், தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிப்பீர் என்று கேட்டுக் கோண்டுள்ளார்.

கோவை சிறுவாணி ஜெயராமின் வீடியோ பதிவு வருமாறு:-

என் பெயர் ஜெயராம். நான் கோவை சிறுவாணி பகுதியில் இருக்கிறேன். நான் கோவை கலைமகள் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பி.காம்., சி.ஏ. படிக்கிறேன்.

எனது அம்மா பெயர் கவிதா. வனத் துறையில் தினக்கூலியாக வேலை செய்து வருகிறார்.

வார இறுதி நாட்களில் டீ கடைக்கு வேலைக்குச் செல்வேன். காய்கறிகள் வெட்டிக் கொடுப்பேன். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் செல்வேன். ஒரு நாளைக்கு ரூ.300 கொடுப்பார்கள். இரு நாட்களுக்கு 600 ரூபாய் அதை படிப்புச் செலவுக்கு பயன்படுத்துவேன்.

கலைமகள் கல்லூரியில் தான் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம் பற்றி கூறினார்கள். அவர்களே என்னை அத்திட்டத்தில் இணைத்து விட்டார்கள். இப்போது இத்திட்டத்தால் எனக்கு மாதம் ரூ.1000 எனது வங்கிக் கணக்கிலே வந்து விடுகிறது. அதனால் இப்போது நான் டீ கடைக்கு வேலைக்குச் செல்வதில்லை. இப்போது படிக்க எனக்கு நேரம் கிடைக்கிறது.

எனது அம்மா கூலி வேலைக்குத்தான் செல்வார்கள். எனக்கு இப்போது ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தால் மாதம் ரூ.1000 வருவதால் என் அம்மாவிடம் காசு எதுவும் கேட்பதில்லை. எனக்கு வரும் இந்த 1000 ரூபாயில் எனது படிப்புக்குத் தேவையான பொருட்களை நான் வாங்கிக் கொள்கிறேன். எனக்கு இத்திட்டம் மிகவும் பயன் அளிக்கிறது.



இவ்வாறு அம்மாணவன்தன் வீடியோ பதிவில் குறிப்பிட்டுள்ளார். அந்த வீடியோவில், மாணவனின் தாயார், கல்வியாளர்களின் பேட்டியும் இடம் பெற்றுள்ளன.

அம்மாணவனைக் குறிப்பிட்டு முதல்வர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**இந்தத் தம்பி மட்டுமல்ல, இது போல இலட்சக்கணக்கான தம்பிகளின் உயர்கல்விக்கு ஊன்றுகோலாக அமைந்துள்ளது தமிழ்ப்புதல்வன்!**

**இவர்களின் கல்வி தொடர, எளிய குடும்பங்களின் அடுத்த தலைமுறைகள் செழிக்க** VoteForDMK!

DravidianModel **வெல்வோம் - ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## பா.ஜ.க. முன்வைக்கும் இரட்டை எஞ்சின் ஆட்சி

# கூட்டாட்சி முறையை பலவீனப்படுத்தும்!

## முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.ஒய்.குரேஷி எச்சரிக்கை!

**புதுடெல்லி, மார்ச் 24 -**

**பா.ஜ.க.வினர் முன்வைத்து வரும் இரட்டை எஞ்சின் அரசு என்ற அரசியல் முழக்கத்தில் கூட்டாட்சி முறையை பலவீனப்படுத்தும் அபாயம் உள்ளதாக முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.ஒய்.குரேஷி தெரிவித்துள்ளார்.**

*Double engine — cute slogan, a serious federal question* எனும் தலைப்பில் எஸ்.ஒய்.குரேஷி எழுதியுள்ள கட்டுரையை ‘தி இந்து’ நாளிதழ் வெளியிட்டுள்ளது.

அதில், தேர்தல் நேரத்தில் நினைவில் நிற்கும் முழக்கங்கள் உருவாகும், வாக்கு எண்ணிக்கை முடிந்தவுடன் அவை மறைந்துவிடும், ஆனால் சில முழக்கங்கள் அரசு நிர்வாகம் குறித்த மக்களின் மனதில் நிலைத்து நின்றுவிடும் என்றும் அத்தகைய ஒரு முழக்கம்தான்



இரட்டை எஞ்சின் அரசு என்றும் சுட்டிக்காட்டி உள்ள அவர், அழகாக தோன்றும் இந்த வார்த்தைக்கு பின் இந்தியாவின் கூட்டாட்சிமுறை குறித்த ஒரு ஆழமான அரசியலமைப்புச் சட்டக் கேள்வி அடங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஒன்றியத்திலும், மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சி செய்தால், வளர்ச்சி வேகமாக நடைபெறும் என்ற வாதத்தில் மேலோட்டமாகப் பார்த்தால் குறையேதுமில்லை எனத் தெரிவித்துள்ள எஸ்.ஒய்.குரேஷி, ஒன்றியத்தில் ஆட்சி செய்யும் கட்சிக்கு எதிரான சித்தாந்தம் கொண்ட கட்சி மாநிலத்தில் ஆட்சிக்கு வருவதை தடுக்கும் நோக்கம் இரட்டை எஞ்சின் ஆட்சி என்ற முழக்கத்தில் மறைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்



# தமிழ் மண்ணுரிமை காத்து, பெண்ணுரிமை பேணி, வெல்வோம் ஒன்றாக!

